# பத்திரிக்கை செய்தி

புதுவை காவல் துறைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 168 காவலர்களின் பயிற்சி நிறைவு மற்றும் அணிவகுப்பு விழா இன்று 02.04.2011 காலை 07.00 மணியளவில் கோரிமேடு காவல்துறை மைதானத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் புதுச்சேரி மாநிலத்தின் மேதகு துணைநிலை ஆளுநர் Dr. இக்பால் சிங் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இதில் புதுச்சேரியின் தலைமை செயலர் திரு. R. சந்தரமோகன், IAS, காவல்துறை IGP திரு. J.K. ஷர்மா, IPS, காவல்துறை DIGP திரு. I.D. சுக்லா IPS, காவல்துறை சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவு SSP திரு. அதுல் கத்தியார், IPS, காவல்துறை தலைமை அலுவலக அதிகாரி SSP Dr. V.J. சந்திரன், PPS, காவல்துறை குற்றம் மற்றும் புலனாய்வு பிரிவு (பொறுப்பு) SSP திரு. ஆன்டோ அல்போன்ஸ், IPS மற்றும் காவல் துறையை சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

163 ஆண் காவலர்கள் மற்றும் 5 பெண் காவலர்கள் ஆக மொத்தம் 168 காவலர்கள் கடந்த 9 மாதகாலமாக கடின பயிற்சி பெற்று இன்று பயிற்சி நிறைவடைந்து முழுமையான தேர்ந்த காவலர்களாக இந்த சிறப்புமிக்க விழாவின் மூலம் புதுவை காவல் துறையில் பணியாற்ற சேர்கிறார்கள். இந்த 168 காவலர்களில் 156 காவலர்கள் ஏற்கனவே ஊர்காவல் படை பிரிவை சேர்ந்தவர்கள். மீதம் உள்ள 12 காவலர்கள் கடந்த காவலர்கள் தேர்வில் காத்திருப்பு பட்டியலில் இருந்து தேர்வு செய்யப்பட்டவர்கள்.

மேற்படி காவலர்களுக்கு 01.07.2011 அன்று பயிற்சி தொடங்கியது. அவர்களுக்கு அனைத்து வகையான உடற்பயிற்சி, ஆயுதங்களை கையாளும் பயிற்சி, லத்தி பயிற்சி, கலக கூட்டத்தை அடக்கும் பயிற்சி, யோகா, முதலுதவி, ஒயர்லஸ் கையாளும் முறை ஆகிய பயிற்சிகள் அனைத்தும் மிக சிறப்பான முறையில் தரப்பட்டது. அதேபோல் சட்டம் சம்பந்தமாக இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் விசாரணை முறை சட்டம், தனிப்பட்ட சிறப்பு சட்டங்கள், நவீன இந்தியாவில் காவலர் பங்கு, காவல் துறையின் அமைப்பும் நிர்வாகமும், மனித உரிமைகளும் அதன் நெறிகளும், காவலர்கள் கடமை,

குற்றவியல், குற்றபுலனாய்வில் விஞ்ஞானத்தின் பங்கு மற்றும் கணிணி ஆகிய பாடங்கள் அனைத்திலும் சிறப்பான முறையில் பயிற்சி தரப்பட்டது.

பயிற்சி முடித்த பின்னர் மேலே குறிப்பிடப்பட்ட பாட பிரிவுகள் அனைத்திலும் தேர்வு வைக்கப்பட்டு உட்பாடத் திட்டங்களில் சிறந்த காவலர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு ரூ.500/- ரொக்கப்பரிசும் மற்றும் வெகுமதி சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

| வரிசை எண். | பாடப்பிரிவு | முதலிடம் பெற்றவர்களின் பெயர்கள் |
|---|---|---|
| 1. | **தாள்-1**<br>நவீன இந்தியாவில் காவலர் பங்கு | K. செந்தில்ராஜ்,<br>பயிற்சி காவலர் எண். A-13 |
| 2. | **தாள்-2**<br>காவல் துறையின் அமைப்பும் நிர்வாகமும் | S. ராமதாஸ்,<br>பயிற்சி காவலர் எண். E-14 |
| 3. | **தாள்-3**<br>குற்றவியல் | K.A. மைக்கல்சாமி,<br>பயிற்சி காவலர் எண். D-23 |
| 4. | **தாள்-4**<br>குற்றபுலனாய்வில் விஞ்ஞானத்தின் பங்கு | K. செந்தில்ராஜ்<br>பயிற்சி காவலர் எண். A-13 |
| 5. | **தாள்-5**<br>இந்திய தண்டனை சட்டம் மற்றும் குற்றவியல் விசாரணை சட்டம் | K. காமராஜ்,<br>பயிற்சி காவலர் எண். A-1 |
| 6. | **தாள்-6**<br>இந்திய சாட்சிய சட்டம் மற்றும் தனிப்பட்ட சிறப்பு சட்டங்கள் | H. மனோஜ்குமார்,<br>பயிற்சி காவலர் எண். B-2 |
| 7. | **தாள்-7**<br>காவலர்களின் பணிகள் | T. பிரபாகரன்,<br>பயிற்சி காவலர் எண். B-16 |
| 8. | **தாள்-8**<br>காவல்துறையின் வழிமுறைகள் | K. செந்தில்ராஜ்<br>பயிற்சி காவலர் எண். A-13 |
| 9. | **தாள்-9**<br>கணிணி பயிற்சி | i) K. சுனில்,<br>பயிற்சி காவலர் எண். A-3<br>ii) V. சௌந்தர் செந்தில்வேல்,<br>பயிற்சி காவலர் எண். A-24<br>iii) J. மாரியப்பன்,<br>பயிற்சி காவலர் எண். E-10 |
| 10. | **தாள்-10**<br>மனித உரிமைகள் | R. ஆர்த்திசோன்,<br>பயிற்சி காவலர் எண். E-10 |

மேலும் துப்பாக்கி சுடுதல், உட்புரப்பாடப்பிரிவு, வெளிப்புரப்பாடப்பிரிவு மற்றும் அனைத்து பிரிவுகளிலும் முதன்மையாக விளங்கியவர்களுக்கும் ரூ.1000/- ரொக்கப்பரிசும் மற்றும் வெகுமதி சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

| வரிசை எண். | விருதுகள் வழங்கப்படும் பிரிவுகள் | முதலிடம் பெற்றவர்களின் பெயர்கள் |
|---|---|---|
| 1. | துப்பாக்கி சுடுதலில் முதன்மையாக சிறந்து விளங்கியவர் | S. ஏழுமலை,<br>பயிற்சி காவலர் எண். E-9 |
| 2. | உட்புரப்பாடப்பிரிவில் முதன்மையாக சிறந்து விளங்கியவர் | K. செந்தில்ராஜ்,<br>பயிற்சி காவலர் எண். A-13 |
| 3. | வெளிப்புரப்பாடப்பிரிவில் முதன்மையாக சிறந்து விளங்கியவர் | R. ஆர்த்திசோன்,<br>பயிற்சி காவலர் எண். E-10 |
| 4. | அனைத்துப்பிரிவுகளிலும் முதன்மையாக சிறந்து விளங்கியவர் | K. செந்தில்ராஜ்,<br>பயிற்சி காவலர் எண். A-13 |

பயிற்சி நிறைவுவிழா முடிந்தபிறகு துப்பறியும் போலீஸ் நாய்களின் சாகசங்களும்,, காவல் இசைவாத்திய குழுவனரின் நிகழ்ச்சியும் நடந்தது.

முடிவில் நன்றி உரையை காவல்துறை DIGP திரு. I.D. சுக்லா IPS, அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும், புதுச்சேரி காவலர் பயிற்சி பள்ளியின் முதல்வர் திரு. P. புருஷோத்தமன், PPS, அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

* * *